DINAMANI 5.12.17

# அதிகார மையங்களில் தமிழ் இடம்பெற வேண்டும்

## வைரமுத்து வலியுறுத்தல்



சென்னை லயோலா கல்லூரியில் திங்கள்கிழமை நடைபெற்ற இலக்கிய மன்ற விழாவில் பேசுகிறார் கவிஞர் வைரமுத்து.

**சென்னை, டிச. 4:** ஆட்சி நிர்வாகம், நீதிமன்றம், கல்வி போன்ற அதிகார மையங்களில் தமிழ் இடம்பெற வேண்டும் என கவிஞர் வைரமுத்து வலியுறுத்தினார்.

சென்னை லயோலா கல்லூரி தமிழ்த்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 'என்னை எழுதிய கவிதைகள்' என்ற தலைப்பில் கவிஞர் வைரமுத்து பேசியது:-

மொழி என்பது மனிதனின் நாகரிகம்; கவிதை என்பது மொழியின் நாகரிகம். இந்த மொழியின் நாகரித்தைத் தொலைத்துக் கொண்டிருக்கிறோம். இருவர் சந்தித்துக் கொண்டால் சினிமா, அரசியல் அல்லது நேற்று வாங்கிய ஒரு பொருள், ஆடை ஆகியவற்றை மட்டுமே பகிர்ந்து கொள்கின்றனர். தமிழர்கள் என்றைக்கு நேற்று படித்த திருக்குறள், கவிதை, கட்டுரை, பொது அறிவை சக நண்பர்களிடம் பகிர்ந்து கொள்கிறார்களோ அன்றைக்குத்தான் தமிழ் வளர்ச்சி பெறுகிறது என அர்த்தம்.

**நினைவாற்றலைப் பெருக்க...** நினைவாற்றல்தான் ஒரு மனிதனின் பேராற்றலாக விளங்குகிறது. ஆனால் செல்லிடப்பேசி வந்த பின்னர் மனப்பாடம் என்பதே மறைந்து விட்டது; சிந்திப்பதும் குறைந்து விட்டது. நான் இருபது வயதுக்குள் ஒரு 500 தமிழ்ச் செய்யுள்களை மனப்பாடம் செய்ததே இன்று என்னை கவிஞனாக அடையாளப்படுத்திக் கொண்டிருக்கிறது. எந்தப் புலவரும் வெண்பா எழுதுவது கடினம் என்று கூறுவார்கள். அத்தகைய வெண்பாவால் ஆன திருக்குறளைப் படித்தால் இளைஞர்களுக்கு நினைவாற்றல் பெருகும்; ஒருவர் குறைந்தபட்சம் 200 திருக்குறள்களாவது படித்திருக்க வேண்டும்.

**அதிகார மையங்களில் தமிழ்:** அழியப்போகும் மொழிகளின் பட்டியலில் தமிழ் இருக்கிறது என ஒரு குறிப்பு சொல்லப்படுகிறது; அந்தக் குறிப்பு யுனெஸ்கோவால் தரப்பட்டது என்கிறார்கள்; பதினேழாவது இடத்தில் தமிழும் இருக்கிறது எனக் கருதப்படுகிறது. ஆனால் எட்டுக்கோடி தமிழர்களில் கடைசித் தமிழன் இருக்கும் வரை தமிழ் அழியாது என்பதுதான் எனது கருத்து. தமிழ் அழியும் என நினைத்தால் அதிகார மையங்களில் தமிழை கொண்டு வருவதற்கு இந்தத் தலைமுறை முழுமையாகப் போராட வேண்டும். அரசமொழி, ஆட்சி மொழி, நீதிமன்றம், கல்வி, வழிபாடு என அனைத்திலும் தமிழ் நிறைந்திருக்க வேண்டும்.

இந்த நவீன வாழ்க்கை முறை பணம், பதவி, புகழ் ஆகிய மூன்று வேட்டைகளிலும் கழிகிறது. இந்த மூன்றும்தான் மனிதனுக்கு ரத்த அழுத்தத்தையும், மன அழுத்தத்தையும் கொடுக்கிறது. இத்தகைய மன அழுத்தத்தால் இளைஞர்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர். இளைஞர்கள்தான் இந்தியாவின் சொத்து; நாட்டின் சொத்தை அழிப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை. உயிர்போன்ற ஒரு சிறந்த வாய்ப்பு யாருக்கும் கிடைக்காது. அந்த உயிரை வைத்து இந்த நாட்டின் மேன்மைக்கு பயன்படுத்த வேண்டும். மன அழுத்தத்தை விட்டு வெளியே வர கவிதைகளைப் படிப்பது, சங்கீதம் கேட்பது, கலைகளோடு ஐக்கியமாவது போன்ற செயல்பாடுகளை மேற்கொள்ளுங்கள் என்றார்.

**ரூ. 2 லட்சம் உதவி:** இதைத் தொடர்ந்து லயோலா முன்னாள் மாணவர் சங்கத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் வாழ்வளிப்போம் (Give life) திட்டத்துக்கு ரூ. 2 லட்சத்தை கவிஞர் வைரமுத்து, பத்திரிகையாளர் தியாகராஜன் குமார் ஆகியோர் சார்பில் வழங்கப்பட்டது. மேலும் இருளர் மக்கள் வாழும் பகுதிகளில் மாலை நேர படிப்பு மையங்களுக்கு ரீ-சார்ஜ் செய்யக்கூடிய 75 விளக்குகள் வழங்கப்பட்டன. இதில் காங்கிரஸ் மூத்த தலைவர் குமரி அனந்தன், லயோலா கல்லூரியின் அதிபர் ஜெயபதி பிரான்சிஸ், தமிழ்த்துறை தலைவர் டேனியல் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.